Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol 42 — No. 3

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | கீலக பங்குனி 1969 மார்ச்சு | இதழ் 3

உள்ளுறை — பக்கம்

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமரகுருநாத முதலி தெருவி லுள்ள சமாஜ அலுவலகத்தில் 30-3-69 ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, சமாஜத் தேர்வு பலன் ஆகிய பொருள்கள் பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர்.

(செயலாளர்)

நம் சமாஜச் சார்பில் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் இரண்டு சமயக் கட்டளைப்படி திருமயிலைக் கபாலீச்சுரர் ஆலயத்தில் 9-2-69 மாலை வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் "ஞானியார் அடிகள்" என்பது பற்றியும் 10-2-69 மாலை வித்துவான் பாலூர் திரு. கண்ணப்ப முதலியார் எம். ஏ., பி. ஓ. எல். அவர்கள் "திருநீலகண்டர்" என்பது பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

சமாஜ உறுப்பினர் கட்டண வேண்டுகோள்

அன்புடையீர்!

வணக்கம். 1969ஆம் ஆண்டின் சமாஜ உறுப்பினர் கட்டணத்தைச் (ரூ. ஐந்து மட்டும்) செலுத்திவிட்டீர்களா? இதுகாறும் செலுத்தவில்லையானால் இப்போதாவது உடனே சமாஜச் செயலாளர் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம். பணம் அனுப்பும்போது சந்தா எண், முகவரி, மாவட்டம் முதலியவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பின் நலம்.

(செயலாளர்)

புரசைத் திருநெறிக் கழக 96ஆம் திங்கள் வழிபாடு 23-2-69 அன்று திருமுக்கூடல், பொற்பந்தல், பிணையூர், சிட்டணஞ்சேரி ஆகிய இடங்களில் சிறப்புற நிகழ்ந்தது.

அருள்திரு சோமசுந்தர நாயகர் அவர்களின் 63ம் ஆண்டு குருபூசா விழாவும் அவர்களால் நிறுவப் பெற்ற சென்னை வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையின் 110ஆம் ஆண்டு விழாவும் 20-2-69, 23-2-69ஆம் நாள்களில் சூளை அங்காளம்மன் கோவிலிலும், மயிலை வன்னியர் சத்திரத்திலும் முறையே சிறப்புற நிகழ்ந்தன.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 42	கீலக ௵ பங்குனி 1969 மார்ச்சு	இதழ் 3

சம்பந்தர்—தென்னர் கற்பு.

(ஆசிரியர்)

திருஞான சம்பந்தர் தாம் பாடிய பதிகள்தோறும், சமணரும் பௌத்தரும் மக்களை நல்வழியில் செலுத்தவில்லை என்று அவர்களைக் குறைகூறி, அவர்களுடைய நெறியில் செல்லாமல் சிவநெறியில் புகுந்து, சிவபெருமான் திருவருளை நாடுக என்று பத்தாம் பாடலில் மக்களுக்கு உபதேசம் செய்கிறார். அவர் வாழ்ந்தது ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. அக்காலத்தில் பாண்டி நாடு முழுமையும் சைவ சமயத்தைக் கைவிட்டுச் சமண சமயம் புகுந்திருந்தது. பாண்டி மன்னன் அரிகேசரி நெல்வேலி வென்ற நெடுமாறன் என்ற பெயருடையவன்; கூன்பாண்டியன் என்றும் பிற்காலத்துப் புராண வரலாறுகள் கூறும். அவனும் சமண சமயத்தில் ஒழுகி வந்தான். சோழ நாட்டு மணி முடிச் சோழன் மகளாகிய மங்கையர்க்கரசியார் என்ற அரசமாதேவியும், மந்திரி குலச்சிறையாரும் மட்டுமே சைவ சமய நெறியில் ஒழுகினார்கள். அரசன் வழியில் குடிகள் ஒழுகுவது இயல்பாதலால், நாட்டில் சிவாலய பூசை முதலியன குன்றியிருந்தன.

இந்த நிலையில், சம்பந்தர் மங்கையர்க்கரசியார் வேண்டுகோளின்படி பாண்டிநாடு புகுந்து மதுரையை அடைந்து, ஆலவாய்ச்சோமசுந்தரப் பெருமானை வணங்கி, அங்கு பாண்டிமாதேவி, குலச்சிறையார் ஆகிய இருவர் செய்த பணியையும் குறிப்பிட்டு இறைவனைப் போற்றுகிறார். ஞானசம்பந்தர், 'எனதுரைதனதுரையாக' என்று பாடியவர்; அவர், 'ஆணை நமதே' என்று பாடியவர். வேதாரண்யத்தில், "கோள்கள் யாவும் அடியார்களுக்கு நல்ல நல்ல, எத்தீமையும் செய்யமாட்டா" என்று அழுத்தமாகப் பாடி, அப்பருக்குச் சமாதானம் கூறியவர். அவ்வளவு அவருக்குத் திருவருள் துணையில் ஆழ்ந்த நம்பிக்கை இருந்தபோதிலும்கூட, மதுரை சென்று இறைவனை வழிபட்டபோது, இறைவன் திருவருளை நாடி, "உன் திருவுள்ளம் எனக்கு உதவி செய்யுமாறு அமைய வேண்டும்' என்று இரண்டு பதிகங்கள் பாடினார். இந்த நிலையைச் சேக்கிழார் பின்வருமாறு மூன்று பாடல்களால் குறிப்பிடுகிறார்.

நோக்கிட விதியி லாரை நோக்கிநான் வாது செய்யத்
தீக்கனல் மேனி யானே திருவுள மேஎன் றெண்ணில்
பாக்கியப் பயனு யுள்ள பாலரு வாயர் மெய்ம்மை
நோக்கிவண் தமிழ்செய் மாலைப் பதிகந்தான் நுவல
லுற்றார்.

கானிடை ஆடு வாரைக் 'காட்டுமா வுரி "முன் பாடித்
தேனலர் கொன்றை யார்தந் திருவுளம் நோக்கிப் பின்னும்
ஊனமில் "வேத வேள்வி" என்றெடுத் துரையின் மாலை
மானமில் அமணர் தம்மை வாதில்வென் றழிக்கப் பாடி.

ஆலமே அமுத மாக உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டும்நான் மறைகள் ஏத்தும்
சிலமே ஆல வாயிற் சிவபெரு மானே என்றார்.

காட்டுமாவதுரித்து என்ற முதல் பதிகத்தைப் பாடிய பின், "வேத வேள்வியை நிந்தனை செய்து" என்று இரண்டாம் பதிகத்தைப் பாடி, திருவுள்ளத்தை வேண்டி, " ஆலவாயில்

உறையும் எம் ஆதியே, ஞாலம் நின்புகழேயாக வேண்டும்" என்று பாடினார். திருவுள்ளம் கேட்கின்ற இருபது பாடல் களில் 'வாது செயத் திருவுள்ளமே' என்று முடிவன பதி னைந்து பாடல்கள். வாதில் வென்றழிக்க, வாதில் சென்ற டித்துஎற என்பன இரண்டு. மற்ற மூன்றும் பின்வருமாறு கேட்பன—சமண் சித்தரை அழிக்க, சாக்கியப் பேயமண் தென்னார் கற்பழிக்க, அமண் அழிப்பரை அழிக்கத்—திரு வுள்ளமே. இவற்றுள், 'சாக்கியப் பேயமண் தென்னார் கற்பழிக்கத் திருவுள்ளமே' என்பது பற்றி ஒருவர் மிகவும் தவறான, விபரீதமான கருத்துத் தெரிவித்தார். இப்பாட லின் முழுவடிவம் பின்வருவது:—

மண்ண கத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ண கத்திரு ஆலவா யாய்அருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தென்னார் கற்பழிக் கத்திரு வுள்ளமே.

இக்காலத்தில் பலர் புதிய கருத்துக்களைச் சொல்ல வேண்டு மென்பதற்காக மரபுக்கு மாறாக எதையேனும் தேடுகி றார்கள். யார் எந்தக் கருத்தோடு எந்தச் சொற்களைச் சொன்னார்கள் என்று நோக்காதபடி, மனத்துக்குத்தோன் றியவண்ணம் திரிக்கவோ மாற்றவோ முற்படுகிறார்கள். இந்த நோக்கமுடையவர்கள் பிற சமயங்களை உயர்த்தியும் சைவம் போன்ற வைதீகச் சமயங்களைக் குறைத்தும் பேசுவது, தங்களுடைய முற்போக்குக்கு எடுத்துக்காட்டு என்று எண்ணுகிறார்கள். இது தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுமையிலும் காண்கின்ற ஒரு போக்கு. அர சியல் துறையில் இப்போக்கு இன்று தலைவிரித்தாடுகிறது. இல்லையானால், சைவ வைணவ சமயங்களில் பெருஞ்சாதனை கள் செய்த ஆசாரியர் எத்தனையோபேர் இருக்க, புத்தருக் காக இந்திய அரசாங்கம் பெருஞ்சிறப்புச் செய்தல் எவ்வாறு பொருந்தும்?

"ஐயா, சம்பந்தர் பெண்கள் கற்பழிக்கத் திருவுள் ளமே என்று பாடுகின்றாரே? சமய ஆசாரியர் என்று நீங்கள்

கொண்டாடுகின்ற இவர் இப்படிச் சொல்வது தருமம் ஆகுமா?" என்று ஓரன்பர் கேட்டார். இவ்வன்பருடைய விளக்கம், சமணப் பெண்களைக் கற்பழிக்க வேண்டுமென்று சம்பந்தர் இறைவனை வேண்டுகிறார் என்பது. இங்கு எந்த நிலையில் சம்பந்தர் இறைவன் திருவுள்ளம் அறிய வேண்டிப் பாடினார்? என்ன பாடினார்? என்பதை நினைவு கொள்ள வேண்டும். இங்கு நாம கூறுவது, சேக்கிழார் பாடிய பெரிய புராணத்திலுள்ள சரித முறையையும் கருத்தையும் பின்பற்றியே என்பதை அன்பர்கள் மனத்தில் இருத்தல் வேண்டும்.

சம்பந்தர் தங்கிய திருமடத்துக்குச் சமணர்கள் மந்திரத்தால் தீயிட முயன்றார்கள். மந்திரம் வாய்க்காது போகவே தழல் கொண்டு வந்து திருமடப்புறச்சுற்றினில் தீ வைத்தார்கள். இதை அடியவர்கள் காட்டக் கண்ட சம்பந்தர் "இது என் பொருட்டுச் சமணர் செய்த தீங்காயினும் இறைவன் அடிய்வர்க்குத் தீங்கு எய்துமோ? இது மன்னன் ஆட்சி முறைமையில் ஏற்பட்ட வழு. ஆகலால் "பையவே சென்று பாண்டியற்காக" என்று பாடினார். இதன் பிறகே சம்பந்தர் இறைவன் திருமுன் சென்று திருவுள்ளம் அறிய வேண்டிக் "காட்டுமாவது" பாடிய நிகழ்ச்சி ஆதலால் அவர், நேரே எதிர்த்து வந்து போர் புரியும் அல்லது வாதிடும் அல்லது தீயிடும் ஆண்மையின்றி மறைந்து தீயிட்ட சமணர் இயல்பைப் பழித்து, "பெண்ணகத்து அமண்" என்று கூறினார். ஆண்மைக்கு அஞ்சுகின்ற செயலைப் பெண்மைக்கு உரிய இயல்பு என்று கூறுவது உலகியல்பு. இங்கு பொருள் ஆண்மைத் தன்மை அற்றது என்ற அளவுக்கே பொருந்தும் அன்றிப் பெண்மைக் குணத்தைக் குறிப்பிட்டதாகாது. ஆகலால் பெண்ணகத்து என்று சம்பந்தர் பாடிய விடத்துப் பொருளாவது ஆண்மையற்றவர்களாகிய சமணர் என்ற அளவே; பெண்கள் என்ற பொருள் இல்லை.

கற்பழிக்க என்ற தொடரினுல் பெண்டிர் கற்பை அழிக்க என்று கருதுவது, இடம் நோக்கிப் பார்க்கும் போது முழுமையும் பிழைபட்ட உரை. வாதில் வென்ற ழிக்கத் திருவுள்ளமே என்றுதான் அவர் எங்கும் பாடு கிருர். இங்கு கற்பு என்ற சொல்லுக்கு, கொள்கை, வாதம், சங்கற்பம், என்பதே பொருளாகும். வாதம் என்ற பொருளிலேயே சம்பந்தர் எல்லாப் பாடல்களையும் பாடியி ருக்கும்போது, இவ்வொரு பாடலில் வேறு பொருள்கொள் வது அவரது கருத்துக்கு முரணுகும். மேலும் கற்பு என்ற சொல்லுக்கு, கோட்பாடு, சங்கற்பம் (கற்பித்துக் கொள்வ தாகிய கொள்கை) என்ற பொருள் உண்டு என்பதைக் கம்ப ராமாயணப் பாடல் ஒன்றினுலும் அறியலாம்.

அண்ணலும் தானையின் அழிவும் ஆங்கவன்
திண்ணெடுங் கொற்றமும் வலியும் சிந்தியா
நண்ணினன் நடந்தெதிர் நமனை இன்றிவன்
கண்ணிடை நிறுத்துவன் என்னுங் கற்பினுன்.

(யுத்தகாண்டம்-கும்பகர்ணன் வதைப்படலம்,
பாடல் 307.)

கற்பினுன் என்பது இங்குக் கருத்துடையவன், உறுதியுடை யவன், கற்பித்ததாகிய சங்கற்பமுடையவன் என்று பொருள் படும். இதுபோலவே சம்பந்தர் பாடலிலும் ஆண்மைத் தன்மையில்லாத நெஞ்சமுடைய அமணர்களாகிய அறிவற்ற வர்களுடைய வாதத்தை அழிப்பது திருவுள்ளமே என்றே பொருள் கொள்ள வேண்டும். (தென்னர்-அறிவில்லா தவர்) கற்பழித்தல் என்பதற்குச் சந்தர்ப்பம் நோக்காது சாமானிய வழக்கில் வழங்குகின்ற உரையைச் சொல்வது பொருந்தாத விபரீத உரையாகும்.

சமயாசாரியர்களைக் குறித்துப் பேசும்போது, பக்தி ஒன்றே மேலோங்கி நிற்கும் உணர்ச்சியாயிருத்தல் வேண் டும். வேறு உணர்ச்சி கொண்டு ஆராய்ச்சியினுள் புகுவது,

சமய ஆசாரத்தைக் குலைப்பது மட்டுமல்லாமல் சமூகத்தையே சீர்குலைப்பதுமாகும். இது தகாது என்பதற்காகவே இங்கு விளக்கிச் சொல்ல நேரிட்டது.

இந்தியாவின் தலைமை நீதிபதி, பிற நீதிபதிகள் அனைவருக்கும், 22—10—68 அன்று சென்னை நகரில் பேசிய பேச்சில் வெளியிட்ட ஒரு குறிப்பு எல்லோரும் சிந்திக்தற்குரியது. "சட்டசபை நிறைவேற்றியுள்ள ஒரு சட்டத்தில் வரும் சிக்கலைத் தீர்க்கச் சட்டத்திற்குப் பொருள்பண்ணுமிடத்து, நீதிபதிகள், அச்சட்டம் என்ன நோக்கத்துக்காகச் செய்யப்பட்டது என்பதை ஆய்ந்து அதற்கேற்பவே பொருள்கொள்ளவேண்டும். மற்றப்படி சொல்லுக்குச் சொல்லாகப் பொருள் கொண்டு தீர்ப்பளித்தல் சட்டம் இயற்றினோர் கருத்தைச் செயல்படுத்தியதாகாது." சட்டத்துக்கே நிலை இது வென்றால், சமயாசாரியரின் அருள் வாக்கை நாம் எவ்வளவு சிந்தித்துப் பொருள்கொள்ளுதல் வேண்டும்!

அன்பர் பணி

[நெல்லை R. S. இராமலிங்கம்]

இவ்வுலக வாழ்வை இன்பமாய்க் கழிக்க இடையறுது இறைவன்பால் அன்பு செலுத்த வேண்டும். அவ்விதம் பக்தி செய்து வந்தால் அவன் திருவருளைப் பெறலாம்,

"கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையோன்" என்றும், "கருவுற்ற நாள்முதலாக உன் பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளமும் நானுங் கிடந்து அலந்து எய்த்து ஒழிந்தேன்!" என்றும் அப்பர் சுவாமிகள் மனமுருகிப் பாடித் திருவருளால் தாம் பெற்ற இன்பத்தை நாமும் அறிந்து உய்யும் வண்ணம் அறிவிக்கின்றார்.

அத்தாவுன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்
அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியநீ எளியை ஆனாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்

பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய? ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை யிருந்தவாறே!

என்று திருக்கருணையின் பெருமையை எளிய இனிய சொற்களால் எடுத்துக் கூறியுள்ளார். இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல் அடியவரை இறைவன் தன்பால் இழுத்துக்கொள்ளும் தன்மையையும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடினால் தீராத பாவமெலாந் தீர்ந்து விடுவதுபோல் அவனது அருள் நோக்கில் அருவினைகள் மறைந்து தீர்த்தங்களில் நீராடிய பலன் சேருகிறது என்னும் சிறப்பையும், தேவர்க்கும் யாவர்க்கும் அரிய பெருமான் அடியவர்க்கு எளியவனாய் வந்து ஆட்கொண்டு அருளும் மேன்மையையும் இதில் விளக்கியுள்ளார். இறைவனது பெருமையையும் தமது சிறுமையையும் எண்ணியவராய், பித்தனேன், பேதையேன், பேயேன், நாயேன் என்று தம்மைத்தாமே தாழ்த்திப் பேசி, சிறந்த சைவ சமயத்தை மறந்து சிலகாலம் சமணசமயத்திற் சேர்ந்திருந்த பெரும் பிழைகளையெல்லாம் பொறுத்து ஆண்டு அருளியதை நினைந்து, இத்தனையும் ஏழை மானுடனாகிய என் பொருட்டோ எம்பெருமான் திருக்கருணை யிருந்தவாறே!' என்று அப்பெருமான் வியந்து அருளியுள்ள செய்யுள் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுவதாகும்.

இத்தகைய சிறப்புமிக்க திருவருளைப் பெறுவதற்கு இலகுவான தொரு வழியைத் தாயுமானவர் அறிவிக்கின்றார்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே!

அன்புமிக்க ஒருவரை அன்பர் என்று கூறுகிறோம். "ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று வள்ளலார் இறைவனை வேண்டுகின்றார். அதன்படி உயிர்கள் பால் அன்புகொண்டு ஒழுகும் உத்தமரே சிறந்த அன்பர் என்னும் சொல்லுக்கு உரிமையானவர். பொதுவாக மக்களிடத்தும், சிறப்பாக இறைவனிடத்தும் அன்பு கொண்டவரை அன்பர் என்று தாயுமானவர் குறிப்பிடுகிறார். அருமறைகளுக்கும் எட்டாத இறைவன் அன்பர்களுக்கு எளியனாய் விளங்குகின்றான். ஆதலால் மக்களிடத்தும் இறைவனிடத்தும் இடையறாது அன்பு செலுத்தும் அடியவர்க்குப் பணி செய்

யும்படி தம்மை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலைதானே வந்து சேரும் என்று தெரிவிக்கின்றார்.

'தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்' என்ற திருவாக்கின்படி எல்லாம் வல்ல இறைவனே நம்பியாரூருக்கு நண்பராக அமைந்தார், செல்வாய செல்வந்தரும் சிவபெருமானைச் சிறந்த தோழராகப் பெற்றிருந்தும் நம்பியாரூரர் திருவாரூர் ஆலயத்திற்குச் செல்லும்போது அங்கு தேவாசிரியன் மண்டபத்தில் கூடியிருந்த எண்ணிறந்த அடியார்களுக்குத் தொண்டு செய்யும் நாள் எந்நாளோ? என்று எண்ணினார். 'அடியவருக்கு அடியவனாவேன்! என்னும் கருத்துடன் திருவாரூர் இறைவனைத் தொழுது நிற்க அவ்விறைவனும் அந்நிலையை அவருக்கு அருள மனங்கொண்டு அருள் செய்தார்.

மன்னுசீரடியார் தங்கள் வழித்தொண்டையுணர நல்கி
பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை அருளிச்
செய்வார்,

தம்முன்னே தொழுது நிற்கும் ஆரூரர்க்குச் சிவனடியார் சிறப்பையெலாம் உணர்ந்து கொள்ளும் ஞானத்தை அளித்து, மேலும் அவர்கள் பெருமையையும் ஆண்டவனே விளக்கமாக அருளிச் செய்தார் என்று சொல்லப்படுகிறது.

பெருமையால் தம்மை யொப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்று மில்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்:
இருமையுங் கடந்து நின்றார்
இவரை நீயடைவாய்' என்று

இவ்விதம் அருட்பெருஞ்சோதி ஆண்டவனே அடியார் பெருமையை அருளிச் செய்தார். 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்றபடி அளவிடலரிய பெருமை வாய்ந்தவர்கள் அடியார்கள். ஆகையால் அவர்கள் பெருமைக்கு அவர்களே ஒப்பாவார்கள், இடைவிடாது இறைவனைத் தொழுது அவ்விறைவனைத் தங்களுக்கு உடைமையாகப் பெற்றவர்கள். அலைந்து திரியும் மனத்தை அடக்கி ஒன்றிய சிந்தையால் உலகையும் வெல்லும் ஆற்றல் உடைய

வர்கள்; குற்றம் குறைகள் இல்லாக் குணசீலர்கள்; அருமையாம் சைவநெறி நின்று அன்பினால் இன்பம் பெறுபவர்கள்; இம்மை மறுமைக்குரிய இருவினைகளையும் கடந்து நின்றவர்கள்; ஆதலால் இவர்களை நீ அடைவாய்'' என்று எல்லாம் வல்ல இறைவனே அருளிச் செய்தனன் என்றால் அடியார் பெருமையை அளவிட்டுக் கூறவும் முடியுமோ! எழுதவும் கூடுமோ?

ஆரூரர் திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்ட பெருமான் ''பித்தா'' என்று பாடுவாய் என்று முதலில் பணித்தார். இப்பொழுது 'திருத்தொண்டத் தொகை' பாடும் உணர்வை அளித்து, 'தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கிப் பாடும்படி ஆரூரருக்கு அருள் செய்தார்.

இவ்வாறு இறைவன் அருளவும், ஆரூரர் திருக்கூட்டத்தைத் தூரத்தே கண்டதுமே கைதொழுது வணங்கி அருகிற் சென்று அழியாப் புகழுடையார் எல்லாருக்கும் தனித்தனியே அடியேன் என்று மொழிந்து ஆர்வத்துடன் திருத்தொண்டர் தொகைப் பதிகம் பாடியருளினார்.

'' உம்பர் நாயகர் அடியார் பேருவகைதாம் எய்த
நம்பியாரூரர் திருக்கூட்டத்தின் நடுவணைந்தார்''

அரிஅயனாலும் அருமறைகளாலும் அறிய முடியாத பெருமான் அடியவர் பொருட்டு எளியனாய் வந்து அருள் செய்து வரும் பெருமை செப்பற்கரிய சிறப்பு வாய்ந்தது.

'வழங்குகின் றாய்க்குஉன் அருளா ரமுதத்தை வாரிக் கொண்டு விழுங்குகின்றேன்' என்று மணிவாசகர் கூறுகின்றார்,

'' ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டாம்''

என்பது சம்பந்தரின் திருவாக்கு. ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் சிறப்பாக அடியார் உள்ளத்தில் எழுந்தருளி உடல் குளிர, உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க உளங் கனிய, கருணைமிகுந்த திருவருளைப் பொழிவதால் அடியவர்களை வணங்கி அனைவரும் நலம்பெற்று வாழவேண்டும். அடியவர்க்குச் செய்யும் பணியெல்லாம் ஆண்டவனுக்குச்

செய்யும் பணியாக அமையும். அடியவர்க்கு அமுது வழங்கினுல் அஃது இறைவனுக்கு அளித்த அமுதாகும் என்றும, ஆனுல் இறைவனுக்குச் செய்யும் சிறப்பான பூசனை, நிவேதனம் எல்லாம் அடியவருக்குச் சேராது என்றும் திருமூலர் தெரிவிக்கின்ருர்,

படமாடுங் கோயில் பரமற்கொன்றியில்
நடமாடுங் கோயில் நம்பர்க்கு அங்காகா
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றியில்
படமாடுங் கோயில் பரமற்கங்காமே!

இங்கு இறைவனைப் படமாடுங் கோயில் பரமன் என்றும் இறைவனுல் படைக்கப்பட்ட மக்களை நடமாடுங் கோயில் நம்பர் என்றும் தெரிவிக்கிருர். சிவனடியார் உள்ளத்தில் சிவபெருமான் இருப்பதால் சிவனடியார்க்குச் செய்யும் சிறப்பெல்லாம் சிவபெருமானுக்குச் செய்யும் சிறப்பாகவே அமையும் என்று சொலலப்படுகிறது. எனவே இறைவர் பணியை விட அன்பர் பணி மிகவும் முக்கியம். அடியவர் திருக்கூட்டத்திற் சேர்ந்து அன்பு நெறியில் நின்ற விறன்மிண்ட நாயனுர் புராணத்தில்,

ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத் தொகை முன்பாடச்
செழுமறைகள்
ஓலமிடவும் உணர்வரியார் "அடியாருடன நாம் உளது"
என்ருல்
ஆலம் அமுது செய்த பிரானடியார் பெருமை அறிந்தார்
யார்?

என்று சேக்கிழார் கூறுகிருர், "அடியாருடன் நாம் இருக்கின்ருேம்" என்று இறைவன் அருளிய குறிப்பு இங்கு கவனிக்கத் தக்கது. தில்லை மூவாயிரவருள் ஒருவர் குறைய. "நம்மையும் ஒருவராக எண்ணிக்கொள்க" என்று அசரீரி வாக்காகத் தில்லையில் அருளிசசெய்ததையும் நாம் இங்கு நினைவிற் கொள்ள வேண்டும்.

நல்லார் இணக்கம் இவ்வழிப் பிறவித் துன்பம் நீங்கிப் பேரின்பம் பெறுதல் அரிது என்பதை ஆன்மாக்கள் உணர்ந்து உய்யும் பொருட்டு ஆரூரருக்கு திருவருள் செய்து பெருமான் திருத்தொண்டத் தொகை பாடவைத்தார்; அதன் மூலம்

அடியவர்கள் இறைவன்பால் கொண்ட அன்பின் திறத்தையும், அவ்வன்பிற்கு எளிவந்த தமது திருவருள் திறத்தையும் இறைவனே உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வுண்மையை அறிந்து யாவரும் அன்பர்பணி செய்து உய்ய வேண்டும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் பலர் சிவனடியாரைச் சிவன் எனவே கண்டு சிறந்த பணிசெய்து இன்பநிலை அடைந்தார்கள். சிவனடியார் இணக்கமே சிறந்த பேருகக் கருதும் மாணிக்கவாசகர்,

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
    உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானல்
    அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
    புரியாய்; பொன்னம்பலத்துஎம்
முடியா முதலே! யென் கருத்து முடியும்
    வண்ணம் முன்னின்றே!

என்று பாடுகின்ருர். "உடையாள் உன் உள்ளத்தில் இருக்கிருள்; உமையவள் உள்ளத்தில் நீ இருக்கிருய்; அடியேன் உள்ளத்தில் இருவீரும் இருப்பது உண்மையானல்-அதாவது அம்மை அப்பன் ஆகிய இருவரையும் அடியேன் இமைப்பொழுதும் மறவாது வழிபட்டு மனத்திலே நினைத்து வருவது உண்மையானல் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் என்று வேண்டுகின்ருர், "பொன்னம்பலத்து எம் முடியா முதலே! என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்று அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்பது அவரது விண்ணப்பம்.

இவ்வரிய கருத்துக்களை யெல்லாம் அடக்கிவைத்து இரண்டு வரியில் "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்று தாயுமானவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். எனவே அன்பர் பணியில் ஈடுபட்டுப் பெறுவதற்கரிய பேரின்பத்தை அடைய வேண்டும்.

நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாதுவேறு நிலையுளதோ? அகமும் பொருளும்

இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியே கம்பனே!

பொன்னும் பொருளும் இல்லாளும் சுற்றமும் எழிலுடம்பும் எல்லாம் வெளிமயக்கே; நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் மெய்ந்நெறியாகும் என்று முற்றவுந் துறந்த பட்டினத்தடிகள் பாடிய பாட்டும் அன்பர் பணியின் சிறப்பை அறிவிப்பதாகும்.

அன்பர் பணியிற் சிறந்து விளங்கிய இளையான் குடிமாற நாயனார் தமது வளஞ்சுருங்கியும் மனம் சுருங்காமல் அடியவர்க்கு அமுது அளித்து வந்தார். ஒருநாள் இரவில் உணவில்லாமல் வருந்திய வேளையில் வயோதிக வேடத்துடன் சிவபெருமானே அடியவராய் வந்தார். அப்பொழுது மழையும் பெய்தது. பசியில் மெலிந்து வந்த பெரியவரை வரவேற்று அவரது ஈரமேனியைத் துடைத்து அமரச் செய்து, இல்லில் ஒன்றும் இல்லாத காரணத்தினல் வயலில் விதைத்த செந்நெல்லை வாரிக்கொண்டு வந்து விரைவில் அமுதாக்கி, கீரையைப் பறித்துக் கறியமுது சமைத்து, களைப்பால் அயர்ந்து உறங்கிய பெரியவரை அமுது உண்ணுவதற்கு எழுப்பவும், அவர் ஒருசோதி ரூபமாய்த் தோன்ற, அருட்சோதி வடிவு கண்டு அவரும் மனைவியாரும் திகைத்து நின்றார்கள். அந்நிலையில் இறைவன் இடபவாகனத்தில் இறைவியோடு காட்சியளித்துச் சிலமார் பூசை செய்த திருத்தொண்டரை நோக்கி,

" அன்பனே! அன்பர்பூசை அளித்தநீ அணங்கினேடு
என்பெரும் உலகமெய்தி யிருநிதிக் கிழவன்றானே
முன்பெரு நிதியமேந்தி மொழிவழியேவல் கேட்ப
இன்பமசார்ந்திருப்பீராம் என்று அருள் செய்தான்'!
எவர்க்கு மிக்கான்

அன்பனே! அன்பர் பூசை அளித்த அன்பனே! என்று அழைத்து, நீ அணங்கினேடு என் பெரும உலகை அடைந்து, இருநிதிக்கு அதிபனகிய குபேரன் நிதியமேந்தி உங்கள் சொற்படி ஏவல் கேட்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்று இன்பமாய் வாழ்வீர்களாக" என்று அருள் செய்த பெருமையைச் சற்று இங்கு சிந்தித்தால் அன்பர் பணியின் சிறப்பு வெள்ளிடைமலை போல் விளங்கும். ஆகையால் அன்பர் பணிசெய்து இம்மையில் இன்பமும, மறுமையில் அழியா முத்தி இன்பமும் பெற்று வாழ இறைவன் திருவடியை இறைஞ்சி உய்வோமாக.

நான்கு படிகள்

(மா. ப. தியாகராசன் பி. ஏ.)

மனிதன் உயர்வெய்த சைவ சமயம் வகுத்துள்ள படிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். அரும்பு, மலர், காய், கனி போன்று ஒரு படியினின்று அடுத்த படியை அடைய வேண்டுமெனபர் பெரியோர். எனினும் ஞானம் அடைந்த பின்னும் "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்று சிவஞான போதம் 12-ஆம் சூத்திரம் கூறும். இதன் உண்மையை ஆராயுமிடத்து சரியை உடம்பைத் தூய்மைப் படுத்துவதற்கும், கிரியை மனத்தைத் தூய்மைப் படுத்துவதற்கும், யோகம் இவ்வுடம்பையும் புறம்போந்துள்ள பஞ்சபூதங்களையும் ஒன்றுபடுத்துவதற்கும் ஞானம் ஐம்பூதங்களுக்கப்பாற்பட்டதாகிய அறிவான இறை சக்தியைப் பெற்று ஐம்புலனுகர்ச்சியால் ஏற்பட்ட சிற்றறிவு வியாபக அறிவாக விளங்கி மனிதனைத் தேவனுக்குவதற்கும் சாதனங்களாம். உடலுள்ளவரை நான்கு படிகளும் இன்றியமையாதனவாகும்.

சரியை என்பது காலையிலெழுந்து மலஜலம் கழித்து நீராடி திருநீறணிந்து, ஆலயம் சென்று சிவபெருமானை ஒருருவத்தில் வழிபடுதலாகும். விரதாதிகள் அனுஷ்டிப்பதும் இதன் பாற்படும். கிரியை என்பது மனத்தினுல் அவனுடைய புகழ்களை நினைந்து பஞ்சாக்கரம் ஓதி வழிபடுதலாகும். ஐம்புலனடக்கமுமிதன்பாற்படும்.

யோகமென்பது நம்முடைய வழிபாட்டிற்குகந்தவரும் மூர்த்தியைக் கண்டு அனுபவிக்க நம்முள் ஓர் அந்தக்கரணத்தை வளர்ப்பதாகும். அடிசில் அடடினிதிருப்ப அதை உண்ண முடியாமல் பசியோடிருத்தல் நம் குற்றமேயன்றி பிறர் குற்றமன்று தண்ணீர் தெளிவு படுத்தப்பட்டுக் குளிர்ச்சியாக மணங்கமழ் வேர்களால் வாசனையுடன் குடங்களில் வைத்திருக்கத தாகவிடாய் தீர்த்துக்கொள்ளாமலிருப்பது தண்ணீர் குற்றமன்று. காற்றுப் புறம் போந்து

எங்குமிருக்க அதைச் சுவாசிக்காமல் மூச்சுத்திணறி மடிதல் காற்றின் குற்றமாகாது. அதுபோல சோதியாய் நம்மைச் சூழ்ந்திருக்கும் இறைவனைக் காணக் கருவியின்றியிருத்தல் அவன் குற்றமன்று. அவன் நம் தகுதிக்கேற்பப் பஞ்சபூதங்களாய் நம்முடலில் சென்று வளர்ச்சியையும் வாழ்வையும் தருகிறன். நாம் உண்ணும் உணவு பிரகிருதி தத்துவம். "உயிர்கட்கமுதாயினன்" என்று கூறுவர் பெரியோர்.

அருந்தும் தண்ணீர் அப்புதத்துவம். சுவாசிக்கும் காற்று வாயு தத்துவம. பேசும் பேச்சு தேயு தத்துவம். உடம்பில் சூடு குன்றிவரும் மரண தசையில் முதலில் பேச்சடங்கும். ஆகாயத் தத்துவமாகிய ஒளியினல் பார்க்கிறேம். ஒலியினல் கேட்கிறேம். இவ்வாறு பஞ்ச பூதங்களை உடம்பில் வாங்கி அனுபவிக்கச் சக்தியைத் தருவது ஆறு ஆதாரங்கள். மூலாதாரம் உண்ணும் உணவைச் சீரணிக்கும் சக்தியைத் தரும் சுவாதிஷ்டானம் நீரை வாங்கித் தாகத்தைத் தவிர்த்து வறட்சியைப் போக்கும். மணிபூரகம் ஹிருதயத்தினல் சுவாசத்தை உள்ளுக்குப் பூரித்துக் கும்பித்துரேசித்துப் பிராணனைத் தந்து வாழ்விக்கும். அநாகதம் கண்டஸ்தானத்திலிருந்து பேச்சுக் காதாரமாக விளங்கும். விசுத்தி நேத்திரஸ்தானமாகப் புருவ மத்திக்கு நேர் பின்புறமிருந்து ஒளியைத் தரும். ஆக்கினை உச்சியில் விளங்கி அறிவை ஆகர்ஷிக்கும். மணி பூரகம் க்ஷீணிப்பதால்தான் ஹ்ருதயம் திடீரென நின்று மரணத்தை உண்டாக்கும். எனவே தியானத்தினல் இந்த ஆதாரஸ்தானங்களை வன்மையுறச்செய்து இறைவனைக் காணும் பொறியைப் பெறுவதே யோகத்தின் பயனகும்.

குறியும் அடையாளங்களும் கோயிலும்
நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆவணம் ஓதிலும்
பொறியிலிர் மனம் என்கொல் புகாததே—எனப்

பாடியுள்ளார் அப்பர் பெருமான். அப்படிப்பட்ட பொறியின்மைபால் திருஞான சம்பந்தர் மூவாண்டில் தன்னுடைய

தகப்பனுருக்குச் சிவபெருமானைச் சுட்டிக்காட்டியும் அவர் காண முடியவில்லை. எனவே யோகத்தின் பயன் அப்படிப் பட்ட திவ்ய சக்ஷு பெறுதலேயாகும். சோதியாய் விளங் கும இறைவன் நம்முள் அறிவாய்க் கலந்து தரும் ஞான போதமே சிவானந்த அனுபவமாகும். மனிதப் பிறவி பெற்ற பயன் அதுவேயாகும். இப்படிப்பட்ட அனுபவம் பெற்று இராமலிங்க சுவாமிகள் பாடுகிருர்.

பாதியிரவில் எழுந்தருளி பாவியேனையெழுப்பி அருட்
சோதியளித்து என்னுள்ள கத்தே சூழ்ந்து கலந்துதுலங்கு
நீதிநடம் செய்பேரின்பநிதி நான்பெற்ற நெடும்பேற்றை
ஓதிமுடியா தென்போலிவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே

நுண்ணியதாய் வெளியாய் விளங்கும் சிவபெருமான் நம்முள் கலந்து துலங்கும் அடைவே ஞானமாகும். இதற் குச் சரியை கிரியை யோகத்தினுல் நம் உடம்பைப் பக்குவப் படுத்தி அவனுக்கர்ப்பணிக்க வேண்டும். இதற்கெனவே சைவசமயம் நான்கு படிகளை வகுத்துள்ளன. அதன் வழி ஒழுகி உய்வோமாக.

பவன் எனும் நாமம்

பசு. பால. நடராசன்

[சென்ற இதழ் தொடர்ச்சி]

இக்கருத்தினை மணிவாசகப் பெருமான் கூறுகிருர். மேற்கூறியவாறெல்லாம் செய்யாவிட்டால் அது மனத்தின் குற்றம் என்று எவ்வளவு கடிந்து வைகிருர்.

ஆடுகின்றிலை; கூத்துடையான் கழற்கு அன்பிலை;
என்புருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதும் செய்கிலை; பணிகிலை; பாதமலர்
சூடுகின்றிலை; சூட்டுகின்றதுமில்லை; துணையிலி
பிணநெஞ்சே
தேடுகின்றிலை; தெருவுதோறலறிலை செய்வதொன்றறியேனே.

மணிவாசகப் பெருமான் மனத்தினை எத்தனை வலிந்து கண்டிக்கிறார். தன்னோடு சேர்ந்து இறைவனை அவாவி நில்லாது பிணங்கி என்னைத் துன்பத்திற்கு ஆட்படுத்தி விடுகிறதென வெறுப்பைத்தான் தெளிவாய்க் காட்டுகிறாரே மணிவாசகப் பெருமான்.

அப்பர் கூறுகின்ற மந்திரத்திலே தவறில்லை. அத்துணை எளிய மந்திரத்தால் எம்பெருமானை அடைவதிலும் ஐயமில்லை. திருவின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக் கரையனின் சொல் உண்மையது. உணர்வின் அடிப்படையது. அவ்வெளிய மந்திரத்தைச் சொல்லுதற்கோ அல்லது சபிப்பதற்கோ மாணிக்கவாசகர் கூறுதல்போலப் புறத்தேயும் ஒருவனுடைய ஒழுக்கம் அமையவேண்டாவா? மேற்கூறியவாறு ஒழுகுகிறவனுக்கு மந்திரம் கைவரப் பெறுதல் எளிது. மந்திரம் சொல்லவல்லானுக்குப் புறவொழுக்கம் கைவரப் பெறல் எளிது.

இறைவனால் ஆட்கொள்ளப்பெற்று மாறாத பேரின்பத் துட் திளைத்து நிலைபெற வேண்டும் என்று எண்ணினால் மனமே, இறைவனுடைய ஆயிரம் திருநாமங்களைப் பாடி மகிழ். சங்கரா என்றும் ஆரூரா என்றும் ஆதீ என்றும் அரற்றினால் நிலைபெறலாமே என்று அப்பர் பெருமான் நிலை பெறுதற்குரிய வழியினைக் கூறுகின்றார்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா!
நித்தலும் எம்பிரானுடைய கோவில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கராசய போற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே.

தலைவனுடைய பெயரைக் கேட்டளவிலேயே தலைவி மயக்கமுறுகிருளே! கைவளை நழுவுமாறு உடல் மெலிகிருளே! அதேமாதிரி இறைவனுடைய பெயரைச் சொல்லிய அளவிலே எத்துணை மாற்றம். அந்த மாற்றம் எத்துணை எளிமையாகி இறைவனிடத்தில் அண்டச் செய்கிறது. ஆகவே தான் இறைவனுடைய பெயரைச் சொல்லி அழைக்கச் சொல்கிருர்.

"கருவாய்க் கிடந்துஉன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துஉன்தன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபாதிரிப் புலியூர் அரனே"

என்ற பாடலிலும் இறைவனுடைய நாமத்தைப் பயிலச் சொல்கிருர் அல்லவா?

'திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்' என்றபடி இறைவனுடைய பெருமையைச் செறித்துப் பெற்றிருக்கிற பவன் எனும் நாமத்தைச் சொன்னல் நாம் உயர்ந்தவர்கள் ஆவோம்.

"சிந்திக்கச் சிந்திக்கச் சிவமுமாவாய், பாவிக்கப் பாவிக்கப் பரமுமாவாய்" என்றவிடத்து நாம் சிந்திப்பதற்கும் பாவிப்பதற்கும் உதவியாய் அல்லது கருவி காரணமாய் (Instrumental cause) அமைவது பவன் எனும் நாமமல்லவா? இறைவனைப் பவன் எனும் நாமத்தால் சிந்தித்தால் சிவமாக்குவிக்காதா?

பங்குனித்திங்கள் சிறப்பு நாள்கள்

3	(16–3–69)	சதயம்–தண்டியடிகள் நாயனர் விழா
11	(24–3–69)	உரோகணி–நேசநாயனர் விழா
13	(26–3–69)	திருவாதிரை–கணநாத நாயனர் விழா
15	(28–3–69)	பூசம்–முனையடுவார் நாயனர் விழா
19	(1–4–69)	பங்குனி உத்தரப் பெருவிழா
21	(3–4–69)	சுவாதி–காரைக்காலம்மையார் விழா

சிவத்திரு. வெ. கா. விருத்தாசல செட்டியார் மணிவிழா

(வை. தி.)

தமிழகத்தில் ஆடுதுறை என்ற பெயரில் சில ஊர்கள் இருக்கின்றன. ஆடுதுறை வேறு. ஆஅடுதுறை (ஆவடு துறை) வேறு. காவிரிக் கரையில் இரண்டு ஆடுதுறைகள் உள்ளன. தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் (காவிரிக்கு வடகரை) ஆடுதுறைப் பெருமாள் கோயில் என்ற ஊர் ஒன்று உண்டு. இவ்வூரில் சிவனுறைகின்ற கோயிற்பகுதி திருவடகுரங்காடுதுறை எனப்படும். பெருமாள் கோயிற்பகுதி கூடலூர் எனப்படும். இது போன்றே குடந்தை வட்டம் (காவிரித் தென்கரை) ஆடுதுறை என்ற ஊர் இருப்புப்பாதை நிலையங்கொண்டும், நெல், வாழை ஆராய்ச்சிப் பண்ணைகளைக் கொண்டும் சிறப்புற விளங்கி வருவதறியலாம். இவ்வூருக்கே திருத்தென்குரங் காடுதுறை என்ற பெயர் பண்டைக் காலந்தொட்டு வழங்கி வருகிறது. இங்குள்ள திருக்கோயில், கண்டராதித்தர் மனைவியார் செயபியன் மாதேவியாரால் திருப்பணி செய்யப் பெற்றதாகும். திருஞானசம்பந்தர், "குரவப் பொழில்சூழ் குரங்காடுதுறையே பரவக்கெடும் வல்வினை" என்றும், திருநாவுக்கரசர் "நாடி நற்றமராயின தொண்டர்காள் கூடுமின் குரங்காடுதுறையையே" என்றும் அருளிப்பாடிய திருத்தல மாகும் அது.

இத்தலத்தில் நம் சமாஜ உறுப்பினர்கள் பலர் இருந்து வருகின்றனர். அவருள் ஒருவர் சிவத்திரு. வெ. க. விருத்தாசலம் செட்டியார் அவர்கள் ஆவார். இவர் நம் சமாஜத்தின் வாழ்நாள் உறுப்பினரும் ஆவார். சமாஜ ஆண்டுவிழாக் காலங்களில் ஈழம், நீலமலை, மற்றும் ஏனைய இடங்களிலும் தவறாது கலந்துகொண்டு சிறப்பித்தவர் ஆவார். அன்னார் நம சமாஜத்தின் முன்னாள் ம. பாலசுப்பிர மணிய முதலியார் அவர்களிடத்தும், திருவெண்ணெய்நல் லூர் மு சின்னசாமி செட்டியார் அவர்களிடத்தும் நன்கு பழகி அவர்களது அன்புக்கு உரியவர் ஆவார். சிவபூசனை

வல்லுநர். முறையே பாடல் பெற்ற தலங்கள் யாவற்றையும் சென்று வணங்கியதோடு ஈழநாட்டுத் திருத்தலங்களையும், இந்தியநாட்டில் திருக்கேதாரம் முதலான தலங்களையும் சென்று வழிபட்ட பெரியவர் ஆவார். இவரது மணிவிழா சென்ற 15—2—69 சனியன்று ஆடுதுறை அவரது இல்லத்தில் சிறப்புற நடைபெற்றது. அந்நாளுக்கு முதல் நாள் சிவனிரவு நன்னாளாக இருந்தமை மிகப் பாராட்டத்தக்கது. அன்று காலை முதல் சூரியனார்கோயில் ஆதீனம் தவத்திரு மீனாட்சிசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களைக் கொண்டு பலருக்குச் சமய, விசேட, நிருவாண தீக்கைகள் முதலியன செய்விக்கச் செய்ததும் அல்லாது அன்றிரவே அறுபத்து ஐந்துக்கும் மேற்பட்ட சிவபூசனையாளர்கள் நான்கு காலங்களிலும் தனித்தனியாக பூசனை புரிந்ததும் மிகவும் பாராட்டப் பெறுவதாகும். மணிவிழாக் கொண்டவரான மாண்புடைய சிவத்திரு. விருத்தாசல செட்டியார் அவர்கள் சிவநெறிப் பாங்கில் சமய உணர்வினையே பெரிதாகக் கொண்டு போற்றிய நற்பணிகள் பிறருக்கு எடுத்துக் காட்டாகத் திகழத்தக்க சிறப்பினதாகும். அன்னாருக்கு நம் சமாஜத்தின் வாழ்த்தினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவத்திரு. விருத்தாசல செட்டியார் அவர்கள் தமது மணிவிழாவின் நினைவாக சமாஜத்துக்கு ஐம்பது வெண் பொற்காசுகள் அனுப்பி வைத்துத் தமது பெயரன், வை. திருஞானசம்பந்தன் அவர்களை சமாஜத்தின் வாழ்நாள் உறுப்பினர் ஆகச் சேர்த்தமைக்கும் நம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதனைப் போன்று பிற சைவப் பெருமக்களும் தங்கள் இல்லங்களில் நிகழும் நல் விழாக்களின் நினைவாக சமயப்பணிக்காகச் சிறு செலவாவது ஆற்றின் நம் சமயம் இன்னும் மேம்பட்டுத் திகழ்வது கண்கூடு. மணிவிழாக் கண்ட பெரியார் இன்னும் பல்லாண்டு எல்லா நலங்களும் பெற்று வாழ பல்லாண்டென்னும் பதங்கடந்தான் அருள அவன் திருவடிகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

உ

சென்னை சைவ சித்தாந்த மகா சமாச 63-ஆம் ஆண்டுவிழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆற்றிய மாநாட்டுத் திறப்புரை

(27-12-68)

பேரன்புக்குரிய பெருமக்களே! தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் நம் நல்வாழ்த்துக்கள்!

முன்னுரை

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகச் செந்தமிழினையும் சிவநெறியையும் தொடர்ந்து வளர்த்துவரும் திருப்பணியிலீடுபட்டு விளங்கும் சைவசித்தாந்த மகா சமாசத்துக்கு நமது வாழ்த்துக்கள்! நமது சமய உலகில் புதிய சிந்தனையைக் கொணர்ந்த பெருமையும், மிண்டிய மாயாவாத மயக்கத்தைத் தவிர்த்த பெருமையும் பண்புறப் பதிக்கப் பெற்ற பன்னிரு திருமுறைகளையும் பலர் கையிலும் உலவச் செய்த பெருமையும் சமாசத்திற்கு உண்டு. சமாசத்தின் சென்ற காலத்தின் பழுதிலாப் பணிகளை நினைந்து வாழ்த்துகின்றோம். இனி எதிர் காலத்தில் சிறப்புறச் செய்ய இருக்கும் பணிகளையும் நினைந்து வரவேற்று வாழ்த்துகின்றோம்.

சமய இயல்

சமயம் ஒரு தத்துவம்; தத்துவம் மட்டுமன்று; நல் வாழ்க்கை முறை. சமயம் கடவுளை முழு முதலாகவுடைய நெறி; மனித சமுதாயத்தை மையமாகக்கொண்டு விளங்கும் நெறி. உயர்ந்த சமயம், நம்பிக்கையில் மட்டும் நிற்பதன்று; நல்லறிவிலும் சிறந்து விளங்கும். உண்மையான சமயம் விந்தைகள் பல செய்யும் விஞ்ஞானத்தினும் மேம்பட்டது. சமயம் ஒரு மாரு உண்மை; அறிவுக்குப் புலப்படுவது. சாதாரண அறிவுக்கன்று; வளர்ந்த முழுநலம் சான்ற மெய்யறி

வில் சிறந்து விளங்குவது. விஞ்ஞானம் இயற்கை ஐம்பெரும் பூதங்களால் விளையும் துன்பத்தைத் தடுத்து நிறுத்துகிறது. புறப்பகைவென்று விளங்குவது நல் விஞ்ஞானம்: பருவுடலுக்குச் சுவை தேர்ந்து உண்ணும் உணவுப் பொருள்களை வழங்கி இதமான இன்பத்தைத் தருவது. புறப்பகை வென்ருல் போதுமா? வெளி வெப்பம் வென்றடக்கும் தட்பவெட்பச் சீதள அறையில் இருந்தாலும் இதயம் மகிழ்ந்துவிடுவதில்லை. எழிலுறு மாளிகையில் இருந்தாலும் இதயம் மகிழ்ந்துவிடுவதில்லை. நெஞ்சுவந்து மகிழ்தலுக்கு உட்பகையை வெற்றிகாண வேண்டும். அறுபகையை அவனருளால் செறல் வேண்டும். அஃது உடன்பிறந்தே கொல்லும் வியாதி அன்ருே? உட்பகை வெல்லும் மெய்யறிவே உண்மைச் சமயமாகும்.

சமயமும் சமுதாயமும்

இன்றைய மானுடச் சாதியின் வாழ்க்கை நிலையினை எண்ணிப் பார்த்தால் நீக்க முடியாத ஏக்கமே மேலிடுகிறது. மனிதன் கடந்த பல நூற்ருண்டுகளாகத் திறமையாகவே வாழ்ந்து வருகிருன்; மாட மாளிகை, கூடகோபுரங்களைக் கட்டிமுடித்து உள்ளான்; அவன் வாழ்க்கையில் அடிக்கடி நேர்ந்த இயற்கை இன்னல்களையும் வெற்றி பெற்றிருக்கிருன். அவனைச் சுழலச் சிதறடித்த காலத்தை வென்றிருக்கிருன். பேருலகத்தை இணைத்து வெற்றிபெற்றிருக்கிருன். அம்மம்ம! அரிய சாதனை! அற்புதச் சாதனை! என் பாட்டி இனிதாகக் காட்டிச் சோறூட்டிய அம்புலியைக் குடியேறிக் கூடாரமாக்கும் குரல் கேட்கிறது! அவனுடைய அறிவுச் சுவடுகள் பதியாத மண்டலங்கள் இல்லை; அண்டங்கள் இல்லை; நினைந்து நினைந்து மகிழத்தக்க சாதனை! ஆனுலும் சாதனையின் மகிழ்ச்சியை முழுவதும் துய்க்க முடியவில்லை. காரணம் உட்பகை ஓய்ந்தபாடில்லை. நிலவுலகங்கள் இணைக்கப் பெற்றன; ஆனுல் இணைக்க வேண்டிய சிறந்த நெஞ்சங்கள் இணைக்கப்பெறவில்லை. செல்வங்கள் செழித்து வளர்ந்தன; ஆனுல் அல்லல் தரும் வறுமை போய்விடவில்லை கருத்துக்கள் வளர்ந்தன. ஆனுல் மோதிக்கொள்ளும் விலங்குணர்ச்சி போனபாடில்லை. உலாவும் மாளிகைகள் உயர்ந்தன; ஆனுல்

ஒழுக்கத்தில் உயர்வில்லை. திருக்கோயில்கள் எழுந்தன; ஆனால் சிறைச்சாலைகள் மூடப்பெறவில்லை. கடவுளின் கருணை பேசப்பெற்றது; ஆனால் இரக்கம் என்பதொன்று எள்ளளவும் சிந்தையில் உண்டாகவில்லை. இஃதென்ன விந்தை! மாளிகை கட்டி முடிப்பது வாழ்ந்தின்புறவா? அல்லது வாழ்விழந்து துன்புற்று அல்லல் படவா? இந்த அவல நிலைக்குக் காரணம் உண்மையான சமயச்சீலம் உலகில் தோன்றி வளரவில்லை என்பதேயாம்.

சமயம்

சமய நெறி என்பது உடற்சார்புடையதன்று; நீங்கா உயிர்ச் சார்புடையது. ஆனால் இன்றோ சமயம் பெரும்பாலும் உடற்சார்புடையதாக மட்டுமே விளங்குகிறது. சமயச் சின்னங்களை நெற்றிகள் தாங்கினாலும் நெஞ்சங்கள் தாங்கவில்லை. மைபொதி விளக்கனையார் மலிந்து வருகின்றனர். "பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்" என்ற சேக்கிழாரின் செந்நெறிக்கு ஏற்றவாறு நெஞ்சுணர்வில் தூய்மை படரவில்லை. சமயமும் ஒரு வளர்ந்த அறிவியலேயாம். எப்படி விஞ்ஞானத்தின் விளைவு வீணாகப் போவதில்லையோ, அது போலவே சமயச் செந்நெறியின் பயனும் விண் போவதில்லை. தண்ணீரில் கிடப்பது மீனுக்குப் பொழுதுபோக்கன்று; அஃது ஒரு பகுதி வாழ்க்கையுமன்று; தண்ணீரில் கிடப்பதேதான் மீனுக்கு வாழ்க்கை. அதுபோல நமக்கும் சமய வாழ்க்கை அமைய வேண்டும். ஆனால் சமயம் சிலருக்குப் பொழுது போக்கு. பலருக்குப் போலிப் பாவக்கழுவாய். ஒரு சிலருக்கு அதுவே வாழக்கைத் தொழில். வேறு சிலருக்கு வளம்பல படைத்து வாழும் வகை. இதுவா சமயம்? 'நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் எழுந்தும்—" என்ற திருஞான சம்பந்தர் திருமொழியை எண்ணுங்கள்! ' என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு இயங்கினான்" என்ற அப்பரடிகளின் அருள்மொழியை எண்ணுங்கள்! சமய ஒழுக்கம் ஒரு மனிதனின் வாழ்க்கை முழுதும் கவர்ந்துகொண்டிருக்க வேண்டும். சிந்தனையும், செவ்விய சொல்லும், செயலும் சமய சீலம் நிறைந்ததாக இருக்கவேண்டும். அவனுடைய வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் சமயத்தின் மாறா முத்திரை

பதிந்து விளங்கவேண்டும். அப்பொழுதுதான் மனிதன் முழுமனிதனுகிருன். அவன் கடவுள் விரும்பும் பொருளு மாகிருன்.

உலகம் விரிந்தது; பரந்துபட்ட பரப்புடையது: சிந்தனை வேறுபாடுகள் உடையது; மொழி வேறுபாடுகள் உடையது; சமயங்களின் வேறுபாடுகளும் உடையது; வேறுபாடுகள் உண்டாயினும் உயிர் ஈடேற்றம் என்ற இலட்சிய ஒருமைப்பாடு உலகத்திற்கு உண்டு. எல்லா மொழிகளுக்கும், எல்லாச் சமயங்களுக்கும் இலட்சியம் ஒன்றேயாம். அதனை அணுகும் முறைகளிலேயேதான் வேறுபாடு. இந்த வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. இவை வேறுபாடுகளே தவிர மாறுபாடுகளல்ல: வளர்ச்சியின் படிமுறைகளேயாம். இவைகளுக்குள் சமரசம் வேண்டும். சமரசம் என்ருல் கலப்படம் செய்வதென்னும் பொருளன்று. இன்று சிலர் சமயத் தத்துவக் கலப்படம் செய்கிருர்கள். உணவுக் கலப்படத்தைவிடத் தத்துவ அறிவுக் கலப்படம் மிகவும் கொடுமையானது; கலப்படம் உயிர் விளக்கத்தைத் தடை செய்யும். தெளிவில் தோன்றுவது தத்துவ விளக்கம் தத்துவ விளக்கத்தில் தோன்றுவது இறையருளின் இன்பக் காட்சி. இதனை, ''சிந்தையுள் தெளிவுமாய், தெளிவினுள் சிவமுமாகி'' என்று அருள் நூல் எடுத்துக் காட்டுகிறது. வளர்நெறிகளின்மாட்டு வெறுப்பின்றி உயர் நெறியிடத்து விருப்பம் காட்டுவதே முறை. சிறந்த வாழ்க்கை நெறிகள் பலவுண்டு. காலத்திற்குக் காலம் நெறிகள் வளர்ந்து வருகின்றன. இதனை ''நெறியெலாம் புலம் ஆக்கிய'' என்ற மணிவாசகர் மணிமொழியால் உணரலாம் உலகில் எல்லாச் சமயங்களும் சிறப்புடையனவேயாம். அவற்றில் ஏதொன்றும் தாழ்ச்சியுடையதன்று. அவை மனித உலகத்திற்குச் செய்திருக்கின்ற சேவைகள் நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து, வாழ்த்துதற்குரியன. ஆயினும் தத்துவ வளாச்சியிலும் தத்துவப் பார்வையிலும் தமிழகச் சித்தாந்தச் சமயநெறி உயிாப்புடையதாக விளங்குகிறது. சித்தாந்தம் என்ருலே முடிந்த முடிபு என்று பொருள். இனிமேல் விளுக்கள் எழுப்ப முடியாத அளவுக்குத் தத்துவத் துறையிலும் வாழ்க்கை முறையிலும் முழுதுற வளர்ந்த நெறி சித்தாந்த சைவமே.

செந்தமிழ்க் குமரகுருபர அடிகளும் "ஓரும் வேதாந்த மென்ற உச்சியிற் பழுத்த"—என்று இதனைப் பாராட்டியுள்ளார்கள். இங்ஙனம் கூறுவது சார்பின் காரணமாக எழுந்த பற்றினு லன்று. உண்மையிலேயே அறிவின் அடிப்படையிலும் வாழ்க்கை இயலிலும் வைத்து ஆராய்ந்தால் சிவநெறி சிறந்து விளங்குமுண்மை எல்லார்க்கும் நன்கு பெறப்படும்.

சிவநெறியின் சிறப்பியல்புகள்

உலகின் பல்வேறு சமயங்கள் உயிரைத் தனித்த—ஒரு நிலைத்த பொருளாக எடுத்துக்கொள்ளவில்லை. உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டன என்று கூறும் சமயங்களே மிகுதி. அந்தச் சமயங்களெல்லாம் கடவுள் எங்கும் நிறைந்தவரென்றும், பேரறிவு பேராற்றல் உடையவரென்றும், பூரண கருணையுடையவரென்றும், பூரண நல்லவரென்றும் கூறுகின்றன. ஒரு நன்மையிலிருந்து தீமை தோன்றுதல் இயற்கைக்கு முரண். தீமை நீங்கப்பெற்று அதனால் நன்மை வளரலாம். இது பரிணும வளர்ச்சி. குற்றங்களும் குறைகளும் உடைய உயிர்களைப் பார்க்குங்கால் இஃது இறைவனுடைய படைப்பு என்று ஏற்றுக் கொள்ள மனம் கூசுகிறது. இந்திய நாட்டில் இந்து சமயம் என்ற மயக்கில் மேலோங்கி வளரும் சமயத்தில் சீவனே சிவன் என்ற கருத்து கூறப்படுகிறது. அதுவும் எவ்வளவு ஆபத்தானது என்பதை எண்ணிப்பாருங்கள். உயிர்கள் படைப்புப் பொருள்கள் அல்ல, என்றும் இயல்பாயுள்ள அழிவில் பொருள்கள் என்பது சிவநெறியின் கருத்து. இந்தக் கருத்து அறிவியலுக்கும் இசைந்த கருத்து. சிவநெறியில் உயிர்கள் உள் பொருள்கள் என்று கூறியதோடன்றி, அவை அன்பு அறிவு, ஆள்வினையுடைய பொருள்களென்றும் கூறுகிறது. மேலும் உரிமை உடையதாக இருக்கின்றனவென்றும் கூறுகிறது. இயற்கையிலேயே ஆணவ அழுக்குடன் உயிர் பிணைந்து இருப்பதன் காரணமாக அன்பு, அறிவு, ஆள்வினை விளங்குவதற்கு இடமின்றி மறைக்கப்பட்டிருக்கிறது. அன்பும் அறிவும் ஆள்வினைகளும் உடைய உயிர்கள் குற்றங்களுடையனவாகவும் இருப்பதற்குக் காரணம்

காட்டுகிறது சைவம். நிலம் விளையும். ஆனாலும் அது கெட்டித் தன்மையுடையதாக இருக்கிறது. கெட்டித் தன்மையை உழுதலாலும், தண்ணீர் கொண்டு நனைத்தலாலும் நிலம் நெகிழ்ந்து விளையும்; பயன்தரும். அது போல உயிரொடு இயற்கையாகப் பிணைந்துள்ள அழுக்கின் ஆற்றலைத் திருவருள் துணையால் மாற்றினால், தன்னறிவும் ஆற்றலும் விளக்கமுறுதலோடு உயிர் பேரறிவும் பெற்று—வாலறிவன் நற்றாள் தொழுதின்புறும் வாய்ப்பினை எய்துகிறது. இந்த வகையிலேயே இறைவனுக்கும் உயிருக்கும் தொடர்பேற்படுகிறது. இறைவனும் என்றும் உள்ள உள்பொருள்; இயல்பிலேயே பேரறிவினன்; மாசற்றவன்; இன்பமே வடிவானவன்; உயிர்களை மறைத்து நிற்கும் மல ஆற்றலை அகற்றக் காரண மாயையினின்றும் பெருங் கருணையின் வடிவமாகிய இறைவன் உலகு உடல் உறுப்பு உண்பொருள்களாகிய காரியமாயையையும் தொன்மைவினையென்னும் வினைத்தன்மையையும் அவ்வுயிர்களுடன் இயைத்தனன். இந்த இயைப்பையே இறைவனின் படைப்பு என்று சைவம் கூறுகிறது. நுண்ணுடலாவது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் பூதமுதலாகிய தன்மாத்திரை ஐந்தும். மனம் எழுச்சி (அகங்காரம்) இறுப்பு (புத்தி) என்னும் அகக்கலன் மூன்றும் ஆக எட்டுக் கருவிகளாலாயது. மனத்தின்கண் தங்கும் தொல்வினைத் தன்மையே ஆதிப் பருவுடல் அமைய வாய்ப்பாக நின்றது.

உயிர்கள் இறைவன் தந்த நுகர் பொருள்களை அவனருளால் நுகர்ந்து வேட்கை தணிந்து அவ்வழி மல ஆற்றல் அடங்கத் தன்னறிவு பெற்று விளங்கி இறைவனை நினைந்து வாழ்த்தி என்றும் மாறாத இன்ப அன்பு நிலையினைப் பெற்று எந்நாளும் இன்புறுகிறது. இதுவே சிவநெறியின் உயிர் வரலாற்றுச் சுருக்கம். இந்தச் சிறந்த கொள்கை அறிவியல் வாதிகளுக்கும் இயைந்ததாகவே அமைந்திருக்கிறது. உலகியல் ஒழுக்க நியதிகளுக்கும் மிகவும் இயைந்ததாகவே விளங்குகிறது.

சிவநெறியின் தொன்மையும் வளர்ச்சியும்

உலகின் மிகப் பழைய சமயங்களுள் ஒன்று சிவநெறி. இல்லை, தொன்மை சான்ற செந்நெறி. இன்றைய மனித அறிவு எல்லைகாணும் வரலாற்று அறிவின் மூலமுதலாக விளங்கும் நெறி சிவநெறி. மண்ணில் மறைந்து போன சிந்து வெளிச் சீமையின் நாகரிகம் இதற்கு எடுத்துக்காட்டு தொல்காப்பியம், திருக்குறள் முதலாகச் சிறந்த சங்க இலக்கியங்கள் ஈறாக உள்ள பழைய இலக்கிய இலக்கணங் கள் சிவநெறியின் சீர்மையையே பேசுகின்றன. எனினும் சிவநெறியின் ஆழ்ந்த அனுபவ வெளியீடுகளாகத் தோன்றி யவை திருஅருள் திருமுறைகளே. திருமுறைகள் இனிய எளிய தமிழில் அமைந்துள்ளன. மனிதகுலத்தின் உணர்வை வளம்படுத்தி உலகுய்யச் செய்யும் சக்தி பெற்றவை திருமுறைகள். தந்தையும் தாயுமாய ஈசனை நந்தம் இறைவனை வேண்டியவாறு மண்ணிற்கழைத்து நடமாடச் செய்யும் ஆற்றலுடையன திருமுறைகள். திருமுறைகள் திருவருளின்பச் சுவையினை வழங்கி இன்பம் பெருக்கும் இயல்பின. திருமுறை நெறி இனிய நெறி; பழைய நெறி; புதுமைக்கும் புதுமையான நெறி; பொதுமை நெறி; அதற்கு ஈடான ஒரு நெறி இன்றுவரை மக்கள் பேசும் வேறு எம்மொழியிலும் தோன்றவில்லை. கார்ல்மார்க்ஸ் மாமுனிவர் தத்துவ நெறிக்கும் நமது சிவ நெறிக்கும் கூட வேற்றுமை விழுக்காடு மிகமிகக் குறைவே. சிவநெறிச் சமயத்தைப் பிற சமயங்களின் தத்துவங்களோடு ஒப்பு நோக்கி விவாதித்துப் பிற சமயங் களின் செழுமையின்மையை உணர்த்தி சிவநெறியின் சிறப்பினை நிலைநிறுத்தத் தோன்றியவை சித்தாந்த சாத்தி ரங்கள். தமிழர் வாழ்வியலில் பூத்துச் செழித்த செந்நெறி சிவநெறி; காலத்தால் முந்திய நெறி; காலத்தை வென்றி ருக்கும் திறனுடைய திருநெறி.

சமய சமரசம்

இன்று உலகம் ஒன்றோடொன்று நெருங்கிக் கொண்டி ருக்கிறது. காலத்தையும் தூரத்தையும் மனிதன் வென்றி

ருக்கிறுன். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமந்திரத் திருமொழி ஒருலகத்திற்கு வித்தட்டிருக்கிறது. ஆனுலும் உலகிடைப் பல சமயங்கள் பள்ளி வகுப்புப் போல் நிலவுகின்றன. எல்லாச் சமயங்களுடைய நோக்கமும் மனித குலத்தை மேம்பாடடையச் செய்வது என்பதுதான். இதனை "இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும் துன்பத்தின் தொடர் பறுத்து" என்று திருவாசகம் எடுததுக்காட்டும் மற்ற அறிவியற் கலைகளைப்போலவே சமயமும் ஓர் அறிவியற்கலை. ஐம்பூதங்களின் தொடர்புடைய அறிவியற் கலையைப் 'பூதஇயல்' என்று சொல்கிறோம். அது போலவே உயிரியலை ஆராய்ந்து, உரிய நெறிகாட்டி உறுபயன் நல்கும் ஒரு நெறிக்கு அருளியல் என்று பெயர். அருளியல் என்ருலும் சமயம் என்ருலும் ஒன்றேயாம். அறிவியல், ஆய்விலும் சோதனைச் செயற்பாட்டிலும் தவறுகள் நிகழுமாயின் உரிய பயனென்றும் கிட்டாது. அதுபோலவே உயிரியல் அறிவிலும் அஃதாவது சமய இயலிலும் பிழைபட்ட கருத்தோ செயலோ காணின் அருளியல் அனுபவமும் கிட்டாது; ஆன்ம ஈடேற்றமும் கிடைக்காது. ஆதலால் சமயத் துறையில் ஏனோதானே என்னும் மனப்போக்குக் கூடாது. ஆனுல் இன்று அரசியல் பொருளியல் ஆகிய துறைகளில் காண விரும்பும் ஒழுங்கு உரிமை உணர்வு களைக்கூடச் சமயத்துறையில் காணமுடியவில்லை.

(தொடரும்)

மதிப்புரை

"சமயங்களைக் குறித்த வியாசம்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இது பாம்பன் ஸ்ரீமத் குமரகுரு தாச சுவாமிகள் அவர்கள் உரைநடையில் ஆசிரியர் மாணவர் தம்முள் வினவிடையாகக் கேட்டு ஐயந்தெளிவது போன்று எழுதிய 32 வியாசங்களுள் ஏழாவதாகும்.

இதனுள் புறச்சமயங்களையும் அவற்றினுட் பிரிவுகளான 24 பேதங்களையும் உட் சமயங்களையும் அவற்றினுட் பிரிவுகளான 24 பேதங்களையும் சுவாமிகள் மிகத் தெளி

வாக விளக்கிக் கூறுகின்றார்கள். மேலும் பண்டைய மக்களின் சமயக் கோட்பாடு பற்றிய 15 மத விகற்பங்களையும் புறப் புறச்சமயமாகிய பிரம்ம சமாஜம் போன்ற பிரிவுகளையும் கூறி இறுதியாக சைவ சித்தாந்த பேதமாகிய எட்டு பிரிவுகளையும் அடிகளார் விளக்கிச் சொல்லுந் திறம் மிகவும் கற்று இன்பந் துய்த்தற்குரியது. சைவ சித்தாந்த விளக்கம் நூலினிறுதியில் மிகவும் சிறப்பாயமைந்துள்ளது. பல நூல்களைப் படித்தாலும் சமய பேதங்களினுட்பத்தை அடிகளார் விளக்கியவாறு நம்மால் தெரிந்து கோடல் அரிது. அந்நிலையில் அப்பெருமானர் வெள்ளிடை மலையென சமய பேதங்களை யெல்லாம் விளக்கித் தெளிந்த சமய அறிவூட்டும் நிலை மிகவும் பேருபகாரமாகும். சமய உட்பிரிவுகளுக்குள்ள வேறுபாட்டினையும் அடிகளார் மிக நுட்பமாக விளக்குகின்றார்கள். சமய அறிவுத் தாகமுடையோர் அவசியம் இந்நூலைப் படித்து இன்புறலாம். கல்விக் கடலாம் அடிகளாரின் பெருமையை இந்நூல் ஒன்றிலிருந்தே காணலமையும்.

சுவாமிகளுடைய சீடர்களுள் ஒருவரும் குமாரச்சிவம் என்னும் பெயருடையவருமாகிய திருவல்லிக்கேணி தா. வேங்கடாசல முதலியார் அவர்களால் இந்நூல் உலகோபகாரமாகப்பதிப்பிக்கப்பட்டது. அவர் இதுபோன்ற சுவாமிகளின் நூற்கள் பலவற்றை வெளியிட்டுபகரித்துள்ளார். அவர் வாழ்க. அவர் முயற்சி வெல்க.

கிரௌன் அளவில் 96 பக்கங்கள் கொண்ட இந்நூல் அடக்கவிலைப் பதிப்பாக நல்லச்சோடு வெளிவந்துள்ளது. விலை ரூ. 1-00 நூல் வேண்டுவோர்

தா. வெங்கடாசல முதலியார்,
1/34 ஆபீஸ் வெங்கடாசல முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். அஞ்சற் செலவு வேறு. (அம்பை)

"தெய்வத்தமிழ்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்ரேம். இது காரைக்குடி சைவசித்தாந்தப் பெருஞ் செல்வர் ராம. சொ. சொக்கலிங்க ஐயா அவர்களால் சிவநேசன் இதழ் மூலம் வெளியிடப் பெற்றது. தற்போது நூலுருவில் வெளி வந்துள்ளது.

தமிழைச் சமயச் சார்பு அற்றதென வேண்டுமென்றே சிலர் ஒதுக்கிவரு மிக்காலத்து இந்நூல் பண்டைக்கால முதல் தமிழ்சமயச் சார்புபெற்று எவ்வெவ்வாறு மேம்பட்டிலங்கி யுள்ளது என்பதை மிகத் தெளிவாய் விளக்கியுள்ளது. மேலும் சைவசமய குரவர், சந்தாஞசாரியர் முதலிய ஞாஞசிரியர்கள் காலத்து இருந்த தமிழின் தெய்வீகத் தன்மையை வெள்ளிடை மலையென எடுத்துக் காட்டுகின்றது. தேவாரம் முதலிய நம் தெய்வத் திருமுறைகள் போற்றப்பெறவேண்டிய தன்மை பற்றியும் நூலினிறுதியில் பல செயல்களைக் கூறி ஆசிரியர் வற்புறுத்திக் கூறல் மிகவும் பாராட்டுக்குரியதுடன் மேற் கொள்ளவும் தக்கது.

இந்நூலில் ஆசிரியர் பல அருமைச் செய்யுள்களையும் மேற்கோள் காட்டுகிருர். அவையெல்லாம் பாட்டுருவில் இல் லாது உரைநடைபோன்றே அச்சிட்டிருப்பது நல்லதன்று. அடுத்த பதிப்பில் பாட்டுருவத்திலேயே அவை அச்சிடப் பெறின் அவற்றைப் படிப்போர் மறுமுறையும் நினைத்த மாத்தி ரத்து அச் செய்யுள்களை எடுத்துப் படித்துப் பயன்பெற வாய்ப் பாயிருக்கும்.

கிரௌன் அளவில் 110 பக்கங்களுக்குமேல் நல்ல அச்சு டன் இந்நூல் வெளிவந்துள்ளது. இதன் விலை குறிக்கப்பெற வில்லை. இந்நூல் வேண்டுவோர் 45 காசுகள் அஞ்சல் தலையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பின் நூலை அனுப்பி வைப்பார்கள். நூற்பெற விரும்புவோர் எழுதவேண்டிய

முகவரி :

திரு. ராம. திருநாவுக்கரசு செட்டியார் அவாகள்,
முத்துப்பட்டணம்,
காரைக்குடி,
இராமநாதபுரம் மாவடடம்.

(அம்பை)

"சிவஞான தேசிகம்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இதுவும் குமாரகுருதாச சுவாமிகள் இயற்றியதே

இதில் 2 ஆவது தேவர்களைக் குறித்த வியாசமும் 3 ஆவது பரமசிவமென்பதைக் குறித்த வியாசமும் அடங்கியுள்ளன.

தேவர்களைக் குறித்த வியாசத்துள் 38 வினாக்களுக்கு விடைகளும் பரமசிவமென்பதைக் குறித்த வியாசத்துள் 55 வினாக்களுக்குரிய விடைகளுமுள்ளன.

தேவர்களைக் குறித்த வியாசத்துள் தேவர்கள் யார்? அவர்கள் பணியாது? அவர்களுள்ளேயுள பிரிவுகள் யாவை? அவர்களைப் பற்றி நூல்கள் நவலும் முறைகள் யாவை? முதலிய பல சிறந்த விவரங்கள் உள்ளன.

பரமசிவமென்பதைக் குறித்த வியாசத்துள் பரமசிவத்தின் ஒப்பற்ற பெருமையையும் மற்றைக் கடவுளருக்கும் பரமசிவத்துக்குமுள்ள வேறுபாடுகளையும் பரமசிவனைப் பற்றிய தெளிந்த அறிவு இன்றிப் பலர் மாறுபடக் கூறியும் எழுதியும் வருவதனை எடுத்துக்காட்டி உண்மை இதுவென விளக்கியும் சிறந்த முறையில் எழுதியுள்ளார்கள்.

இதனை சுவாமிகளின் அடியார் குழாத்துள் ஒருவராகிய திருமதி ப. அரங்கநாயகி அம்மையார் தம் சொந்தச் செலவில் மக்களுய்யும் பொருட்டு வெளியிட்டுள்ளார்கள்.

யாவரும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம். நூல் வேண்டுவோர் பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகள் தேவஸ்தானம், சென்னை 41. என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும். கிரௌன் 86 பக்கங்கள் கொண்ட அடக்கவிலைப் பதிப்பு நூல் விலை ரூ. 0-60. அஞ்சற்செலவு வேறு. (அபயை)

பிற செய்திகள்

வடாற்காடு மாவட்டம் நெமிலி கிராமம், அப்பர் வார வழிபாட்டுச் சபையின் செயலாளர் திரு. கி. குப்புசாமி முதலியார் அவர்கள், தைப்பூசத் தினத்தன்று (1-2-69) சிவபிரான் திருவடி நிழல் எய்தியதை முன்னிட்டு, அவர்களின் படத்திறப்பு விழா, 16-2-69 ஞாயிறன்று சிவராத்திரிக்கு மறுநாள், நெமிலி ஈசுவரன் கோயிலில், சபையின் தலைவர் திரு. ம. ரா. சஞ்சீவி முதலியார் அவர்கள் தலைமையில், சிறப்புற நடைபெற்றது.

★

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பழம்பெரும் உறுப்பினரும், ஆயிரத்தின் மேலும் பிறைபல கண்ட அண்ணலாரும் ஆகிய தாயபரம் திரு. ச. நடேச முதலியார் அவர்கள், படத்தைத் திறந்து வைத்தார்கள். திரு. பி. ஏ. நடேச முதலியார், திரு. என். ஏ. வேணுகோபால் முதலியார், திரு. டாக்டர் பப்ஜு ராப், திரு. கோபால் முதலியார், திரு. ஞானப்பிரகாச ரெட்டியார், திரு. இராமசாமிப் பிள்ளை, திரு. புலவர் ந ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., ஆகிய அறிஞர்கள் பலர், காலஞ் சென்ற திரு. கி. குப்புசாமி முதலியார் அவர்களின் உண்மைத் தொண்டுகளையும் உயர்ந்த பல பண்புகளையும் குறித்து, நெக்கு நெக்கு உள்ளம் நெகிழ்ந்துருகப் பேசித் தங்கள் அனபையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொண்டார்கள். கோயிலில் சுவாமி அப்பாருக்குச் சிறப்பு அபிடேக அலங்காரங்களும், அருச்சனைகளும் செய்விக்கப்பெற்றன. செல்வி கௌரியம்மையின் தேவார இசையரங்கும் சிறப்புற நடைபெற்றது. உள்ளூர் மக்கள் திரளாக வந்திருந்து, மறைந்த அருப்பெறல் தொண்டருக்குத் தங்கள் அன்பையும் வணக்கங்களையும் புலப்படுத்திக்கொண்டு சிறப்பித்தனர்,

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களிடம் நெய்வேலி யில் சிலர் வன்முறைச் செயல்களை மேற்கொண்டது பற்றி கண்டித்து நம் சமய நிறுவனங்கள் பலவிடங்களிலிருந்தும் சமாஜ அலுவலகத்துக்குப் பல தீர்மானங்கள் வந்த வண்ண மிருக்கின்றன. பொத்தனூர் திருமுறை மன்றம், குடந்தை சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கம் போன்ற நிறுவனங்கள் பல தங்கள் கண்டனங்களைத் தீர்மானம் மூலம் அனுப்பி யுள்ளன.

விதியைப் பற்றி வற்புறுத்தவந்த அருள்மிகு வாரியார் சுவாமிகள் அறிஞர் அண்ணாவின் நிகழ்ச்சியை எடுத்துக் காட்டாகக் கூறியுள்ளது பலருக்கு மனம நோகச் செய்துளது அறிந்து மன்னிப்புக் கேட்டபிறகும் வன்முறைச் செயல் நேர்ந்ததும் பாதுகாப்புத்துறை நன்முறையில் நடக்காததும் மிகவும் வருந்தத்தக்கவையே யாகும். இச்செய்தி சமய அன்பர்களுக்கு மிகவும் கவலையூட்டுவதாகும். அரசினர் இந்நிகழ்ச்சி குறித்து தக்க நடவடிக்கை எடுத்து "செய்தக்க செய்யாமையானும் கெடும்" என்னும் பழிநிலைக்கு ஆளா காது இருக்குமாறு வேண்டுகின்றோம்.

அப்பர் வார வழிபாட்டுச் சபையின் வளர்ச்சி கருதிக் கோயிலுக்கு அருகில் ஒரு கல்யாண மண்டபம் கட்டி அளித்துள்ள, ருக்மணி குக்கர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் எம். ஏ., அவர்கள் பல ஆண்டுகளாகத் திரு. கி. குப்புசாமி முதலியார் அவர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் முதலியன அளித்து ஆதரித்து வந்ததுடன், அவர் தம் இறுதிச் சடங்குகட்கும் தக்க உதவிகள் புரிந்தனர். மேலும் படத்திறப்புவிழா நிகழ்ச்சி நன்கினிது நடைபெற வும், திரு. இராசகோபால நாயுடு போன்ற தக்கார் மூலம் அவர் ஏற்பாடுகள் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மறைந்த அப்பெரியாரின் ஆன்மா இறைவன் திருவடியிணை யின்புற்றிருக்க அப்பெருமா னருள்புரிய அவனையே வணங்கி வேண்டுகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T. for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.

பேரூர். தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழாவினை யொட்டி திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறை விழா, காந்தியடிகள் நூற்றாண்டு விழாவும் முத்தமிழ் விழாவும், வார வழிபாட்டு விழா, சத்வித்யா சன்மார்க்க சங்க 53ஆவது ஆண்டு விழாவும் முறையே 1-3-69, 2-3-69, 3-3-69ஆம் நாட்களில் சிறப்புற நிகழ்ந்தன.

காஞ்சி மெய்கண்டார் கழகச் சார்பில் காமாட்சியம்மையார் மாசிமகப் பெருவிழாவில் 26-2-69 முதல் 2-3-69 முடிய சமய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. 2-3-69 அன்று காஞ்சிச் சிவதல வார வழிபாடு விடுவச்சேனீசப் பெருமான் திருக்கோயிலில் சமய விரிவுரையுடன் சிறப்புற நிகழ்ந்தது.

திருவாலவாயச் சைவ சித்தாந்த சபையின் சார்பில் 5-3-69 மாலை திருவள்ளுவர் முத்திபெற்ற மாசி உத்திர நாள் விழா கொண்டாடப் பெற்றது. பல பெருமக்கள் சொற்பொழிவாற்றினர்.

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி முருகன் செந்தமிழ்க் கழக 16ஆம் ஆண்டு வார வழிபாட்டு விழாவும், கல்லூரி நிறுவியவர் விழாவும் பழைய மாணவர் கழக 22ஆம் ஆண்டு விழா, முருகன் செந்தமிழ்க் கழக 32ஆம் ஆண்டு விழாவும் முறையே 7-3-69, 8-3-69, 9-3-69ஆம் நாள்களில் சிறப்புற நிகழ்ந்தன.

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினர் திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் எம். ஏ. அவர்கள் திருமகனார் திருசிவகுமாரனுக்கும் திரு G. முனிவேலு செட்டியார் அவர்கள் திருமகளார் திருமதி சகலகலாவல்லிக்கும் திருமணம் 6-3-69 வியாழன் காலையில் சிறப்புற நிகழ்ந்தது. சமாஜச் சார்பில் திருமணமக்களுக்கு வாழ்த்திதழ் வாழ்த்திக் கொடுக்கப்பெற்றது.

புதுமணமக்கள் மங்கையோர் பங்கினனின்னருளால் எல்லா நன்னலங்களும் இனிதுறப்பெற்று நீடுவாழ அருள் பாலிக்க வாழ்த்தி வணங்குகின்றோம்.

நம் சமாஜப் பேரன்பர் எழுமாத்தூர் வேலம்பாளையம் வித்துவான் திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் அரும்பெறற் செல்வர் திரு. V. D. துரைராசு ஐ. ஏ. எஸ். (அண்டர் செக்ரட்டரி, நிதி இலாகா, தமிழக அரசு) அவர்களுக்கும் சோமனூர் திரு. A. R. சுப்பையா

கவுண்டர் அவர்கள் அரும்பெறற் செல்வி திருமதி. S. தன லட்சுமி அம்மையாருக்கும் 10-3-69 அன்று சோமனூர் ஸ்ரீ சீதாராம் ஜின்னிங் பேக்டரி கட்டிடத்தில் திருமணம் மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

சைவ சமய மணங்கமழும் பெருமை மிக்க இம்மணமக்கள் தங்கள் வாழ்வில் சமயப் பணியையும் தக்கதொன்றாகக் கொண்டு ஏற்று ஒல்லும் வகையான் பணிசெய்து பெருமை பெற வேண்டிக் கொள்கின்றோம். இப்புதுமணமக்கள் நின்றசொல்லராய் நீடுதோறினியராய் என்றும் நன்குவாழ எல்லாம் வல்ல பரம்பொருள் அருள்பாலிக்க அவனிணையடிகளையே வணங்கி வாழ்த்துகின்றோம்.

Statement about ownership and other particulars abcut newspaper (**SIDDHANTHAM** *to be published in the first issue* (MONTHLY) *every year after last day of February.*

Form IV
(See Rule 8)

1.	Place of publication	...	12, East Mada Street, Mylapore, Madras-4.
2.	Periodicity of its publication	...	Monthly
3.	Printer's Name	...	V. Ssmbandam
	Nationality	...	Indian
	Address	...	33, Armenian Street, Madras-1.
4.	Pnblisher's Name	...	S. Satchidanandam Pillai
	Nationality	...	Indian
	Address	...	175-A, Loyds Road, Madras-14.
5.	Editor's Name	...	V. Arunachalam Pillai
	Nationality	...	Indian
	Address	...	Gandhi Vidyalayam, Thiruchitrambalam. (via) Panthanallur, Tanjore Dt.
6.	Names and address of individuals who own the newspaper and Partners or shareholders holding more than one per cent of the total capital.		"Saiva Siddhantha Maha Samajam" (Registered) with no shareholders or partners but only members paying subscription. ["Siddhantham" is not a newspaper.]

I, S. SATCHIDHANANTHAM PILLAI, hereby declare that the Particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) *S. Satchidanandam Pillai*

Date: 26—2—69.